தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாட்டில் 2015-ம் வருடத்திற்கான தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பு

எதிர்வரக்கூடிய 2015-ம் ஆண்டின் தென்மேற்குப் பருவமழைக் காலத்திற்கான (ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை) மழை பற்றிய முன்னறிவிப்பு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்தியரேகையை ஒட்டியுள்ள கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை மற்றும் தென் மண்டல காற்றழுத்த குறியீடு ஆகியவற்றை உபயோகித்து ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து பெறப்பட்ட மழை மனிதன் (Australian Rainman International V.4.2 Software) என்னும் கணிணி கட்டமைப்பைக் கொண்டு 2015-ம் ஆண்டிற்கான தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பு பெறப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் எதிர்பார்க்கப்படும் 60 சதவிகித வாய்ப்பிற்கான மழையளவு கீழே தரப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவகாலத்தில் **சராசரி மழையளவு** எதிர்பார்க்கப்படும் இடங்கள் அரியலூர் , சென்னை, கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருவள்ளுர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்.

தென்மேற்கு பருவகாலத்தில் **சராசரி மழையளவை ஒட்டியமழை** எதிர்பார்க்கப்படும் இடங்கள் கோவை, ஈரோடு, கரூர், மதுரை, தேனி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்.

தென்மேற்கு பருவகாலத்தில் **சராசரி மழையளவைக் காட்டிலும் குறைவான மழை** எதிர்பார்க்கப்படும் இடங்கள் நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, திருவாரூர், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்.

- ***சராசரி மழையளவு:*** *(நீண்ட கால சராசரி மழையளவிலிருந்து ± 10 சதவிகிதம்)*
- ***சராசரி மழையளவை ஒட்டிய மழையளவு:*** *(நீண்ட கால சராசரி மழையளவிலிருந்து 11 முதல் 20 சதவிகிதம் குறைவு)*
- ***சராசரி மழையளவைக் காட்டிலும் குறைவான மழையளவு:*** *(நீண்ட கால சராசரி மழையளவிலிருந்து 20 சதவிகிதத்திற்கும் குறைவு)*

***தகவல்***
***வேளாண் காலநிலை ஆராய்ச்சி  மையம்***
***பயிர் மேலாண்மை இயக்ககம்***
***தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்***
***கோயமுத்தூர் - 641 003.***

# தமிழ்நாட்டின் தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பு - 2015

| வ.எண் | மாவட்டங்கள் | சராசரி மழையளவு | எதிர்பார்க்கப்படும் மழையளவு | சதவிகித வேறுபாடு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| மேற்கு மண்டலம் - மழையளவு(மி.மீ) | | | | | |
| 1 | கோயமுத்தூர் | 193 | 165 | -17.1 | சராசரி மழையளவை ஒட்டிய மழை |
| 2 | திருப்பூர் | 193 | 166 | -16.4 | சராசரி மழையளவை ஒட்டிய மழை |
| 3 | ஈரோடு | 213 | 180 | -18.4 | சராசரி மழையளவை ஒட்டிய மழை |
| வடகிழக்கு மண்டலம் - மழையளவு(மி.மீ) | | | | | |
| 4 | சென்னை | 444 | 440 | -8.2 | சராசரி மழையளவு |
| 5 | திருவள்ளூர் | 450 | 444 | -1.3 | சராசரி மழையளவு |
| 6 | காஞ்சிபுரம் | 463 | 422 | -9.7 | சராசரி மழையளவு |
| 7 | வேலூர் | 442 | 423 | -4.6 | சராசரி மழையளவு |
| 8 | திருவண்ணாமலை | 466 | 425 | -9.6 | சராசரி மழையளவு |
| 9 | விழுப்புரம் | 433 | 427 | -1.4 | சராசரி மழையளவு |
| அதிக மழையளவு மண்டலம் மற்றும் மலைப்பிரதேசம் - மழையளவு(மி.மீ) | | | | | |
| 10 | கன்னியாகுமரி | 328 | 342 | 4.2 | சராசரி மழையளவு |
| 11 | நீலகிரி | 1060 | 965 | -9.8 | சராசரி மழையளவு |
| வடமேற்கு மண்டலம் - மழையளவு (மி.மீ) | | | | | |
| 12 | சேலம் | 380 | 350 | -8.6 | சராசரி மழையளவு |
| 13 | நாமக்கல் | 317 | 327 | 3.1 | சராசரி மழையளவு |
| 14 | தர்மபுரி | 361 | 390 | 7.4 | சராசரி மழையளவு |
| 15 | கிருஷ்ணகிரி | 404 | 388 | -3.9 | சராசரி மழையளவு |
| காவிரி டெல்டா மண்டலம் - மழையளவு (மி.மீ) | | | | | |
| 16 | திருச்சி | 270 | 291 | 7.2 | சராசரி மழையளவு |
| 17 | தஞ்சாவூர் | 342 | 335 | -2.0 | சராசரி மழையளவு |
| 18 | அரியலூர் | 350 | 327 | -7.0 | சராசரி மழையளவு |
| 19 | பெரம்பலூர் | 350 | 328 | -6.6 | சராசரி மழையளவு |
| 20 | கரூர் | 250 | 212 | -17.7 | சராசரி மழையளவை ஒட்டிய மழை |
| 21 | திருவாரூர் | 302 | 224 | -34.7 | சராசரியை விட குறைந்த மழையளவு |
| 22 | கடலூர் | 374 | 357 | -4.7 | சராசரி மழையளவு |
| 23 | நாகப்பட்டினம் | 274 | 222 | -23.5 | சராசரியை விட குறைந்த மழையளவு |
| தென்மண்டலம் - மழையளவு (மி. மீ) | | | | | |
| 24 | தூத்துக்குடி | 87 | 64 | -34.9 | சராசரியை விட குறைந்த மழையளவு |
| 25 | திருநெல்வேலி | 93 | 71 | -30.7 | சராசரியை விட குறைந்த மழையளவு |
| 26 | விருதுநகர் | 182 | 145 | -25.8 | சராசரியை விட குறைந்த மழையளவு |
| 27 | புதுக்கோட்டை | 351 | 345 | -1.8 | சராசரி மழையளவு |
| 28 | இராமநாதபுரம் | 136 | 91 | -49.0 | சராசரியை விட குறைந்த மழையளவு |
| 29 | சிவகங்கை | 290 | 238 | -21.8 | சராசரியை விட குறைந்த மழையளவு |
| 30 | தேனி | 178 | 155 | -15.2 | சராசரி மழையளவை ஒட்டிய மழை |
| 31 | மதுரை | 305 | 263 | -16.0 | சராசரி மழையளவை ஒட்டிய மழை |
| 32 | திண்டுக்கல் | 251 | 240 | -4.8 | சராசரி மழையளவு |




**<u>தகவல்</u>**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.வே.ப.க கோயமுத்தூர் - 641 003**

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்